AglaSem Admissions

88

Total Pages : 7

# ENTRANCE EXAMINATION, 2018

## M.Phil./Ph.D. TAMIL

[ Field of Study Code : TAMP (129) ]

*Time Allowed* : 3 hours *Maximum Marks* : 100

### பகுதி – அ

**கீழ்வரும் வினாக்களுக்கான சரியான விடையைத் தருக.** 1X40=40

1. குறிஞ்சியும் முல்லையும் திரிந்து பாலை ஆகும் என்றவர் -

அ) உ.வே.சா. ஆ) பரணர் இ) இளங்கோவடிகள் ஈ) கபிலர்

2. செய்யுள் ஈட்டச் சொற்கள் -

அ) திரிசொல் திசைச் சொல் இயற்சொல்

ஆ) உரிச்சொல் பெயர்ச்சொல் இயற்சொல்

இ) உரிச்சொல் இடைச்சொல் இயற்சொல்

ஈ) உரிச்சொல் வினைச்சொல் இயற்சொல்

3. வடமொழி தண்டி ஆசிரியருடன் தொடர்புடையவை -

அ) தொல்காப்பியம் தண்டியலங்காரம்

ஆ) தொல்காப்பியம் நேமிநாதம்

இ) வீரசோழியம் தண்டியலங்காரம்

ஈ) நேமிநாதம் தண்டியலங்காரம்

4. நேர்பு நிரைபு - எனும் கருத்தியலுக்குரியவர்

அ) கபிலர் ஆ) தொல்காப்பியர் இ) பரணர் ஈ) பவணந்தி

5. பாட்டியல் நூல்களுடன் தொடர்புடையது –

அ) சிற்றிலக்கியங்கள் ஆ) காப்பியங்கள்

இ) பக்தி இலக்கியங்கள் ஈ) அற இலக்கியங்கள்



[ P.T.O.

www.nitropdf.com

AglaSem Admissions

6 . திரிக் குறள், முன்கலைத் திவாகரம், ஒரு பைசாத் தமிழன் –
இவற்றுடன்தொடர்புடையவர்:

அ) பெரியார் ஆ) அயோத்திதாசர் இ) காந்தியடிகள் ஈ) சிங்காரவேலர்

7. பொருத்தமான இணை எது?

அ) புத்தமித்திரர் , பெருந்தேவனார் ஆ) பவணந்தி, இளம்பூரணர்

இ) தொல்காப்பியர், மயிலைநாதர் ஈ) நேமிநாதம் , கல்லாடர்

8. பொருத்தமான இணை எது?

அ) கலித்தொகை ஐங்குறுநூறு ஆ) கலித்தொகை புறநானூறு

இ) கலித்தொகை குறுந்தொகை ஈ) கலித்தொகை பதிற்றுப்பத்து

9. சங்க இலக்கியத்துடன் மட்டும் தொடர்புடையவை –

அ) இறைச்சி , உள்ளுறை ஆ) உவமை , உள்ளுறை

இ) இறைச்சி , உவமை ஈ) இறைச்சி , மெய்ப்பாடு

10. சரியான இணை எது –

அ) இரகுவம்சம், குமாரசம்பவம், சிலப்பதிகாரம், மணிமேகலை

ஆ) இரகுவம்சம், குமாரசம்பவம், சிலப்பதிகாரம், குண்டலகேசி

இ) இரகுவம்சம், குமாரசம்பவம், சிலப்பதிகாரம், திருக்குறள்

ஈ) இரகுவம்சம், குமாரசம்பவம், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி

11. Lyric - எனப்பெறுவது -

அ) வீரநிலைத் தன்மையுடன் தொடர்புடையது ஆ) அறம் உரைப்பது

இ) பக்தியை வெளிப்படுத்துவது ஈ) நெடும்பாடல்களுடன் தொடர்புடையது

12. பழந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிக்க மிகவும் உதவுவது –

அ) மூலபாடத் திறனாய்வு ஆ) விளக்கமுறைத் திறனாய்வு

இ) வரலாற்றியல் திறனாய்வு ஈ) கள ஆய்வு

13. கள ஆய்வுடன் மட்டும் தொடர்புடையவை -

அ) நேர்காணல், பேட்டி ஆ) நேர்காணல், பகுப்பாய்வு

இ) பேட்டி, பகுப்பாய்வு ஈ) பகுப்பாய்வு , கலந்துரையாடல்



eaglasem.com

www.nitropdf.com

AglaSem Admissions

14. API Method - எனப் பெறுவது

அ) ஆய்வு நெறிமுறைகளுடன் தொடர்புடையது

ஆ) ஆய்வு அணுகுமுறைகளுடன் தொடர்புடையது

இ) கள ஆய்வுடன் தொடர்புடையது

ஈ) மருத்துவத்துறையுடன் தொடர்புடையது

15. ஈகார இறுதி ஆகார இயற்றே – இதனுடன் தொடர்புடையது

அ) மாட்டெறிதல் ஆ) முன்னம் இ) நோக்கு ஈ) வண்ணம்

16. எது சரியானது -

அ) இராமனை கண்ணன் நேற்றுப் பார்த்தான்

ஆ) இராமனைக் கண்ணன் நேற்று பார்த்தான்

இ) இராமனை கண்ணன் நேற்று பார்த்தான்

ஈ) இராமனைக் கண்ணன் நேற்றுப் பார்த்தான்

17. திராவிட சிசு – எனப் பெறுபவருடன் தொடர்புடைய ஊர் -

அ) சீர்காழி ஆ) திருப்பதி இ) குருவாயூர் ஈ) சென்னை

18. ஈடு – இதனுடன் தொடர்புடையது

அ) வைணவ இலக்கியம் ஆ) அற இலக்கியம்

இ) சிற்றிலக்கியம் ஈ) காப்பியம்

19. முசிறி, கொற்கை என்பன -

அ) துறைமுகங்கள் ஆ) பண்டைத் துறைமுகங்கள்

இ) பண்டை ஊர்கள் ஈ) பண்டை நகரங்கள்

20. Natural History – எனும் நூலுடன் தொடர்புடைய காலம்

அ) சங்க காலம் ஆ) பக்தி காலம்

இ) நாயக்கர் காலம் ஈ) ஐரோப்பியர் காலம்



www.nitropdf.com

AglaSem Admissions

21. அண்மையில் சாகித்திய அகாடமி விருது பெற்றவர் அடங்கியது

அ) நாஞ்சில் நாடன், பூமணி , ஜோ.டி. குரூஸ்

ஆ) வண்ணநிலவன், பூமணி , நாஞ்சில் நாடன்

இ) பூமணி, ஆ. மாதவன், நாஞ்சில் நாடன்

ஈ) மேலாண்மை பொன்னுச்சாமி, பூமணி , நாஞ்சில் நாடன்

22. ஒன்பது ரூபாய் நோட்டு – எதனுடன் தொடர்புடையது?

அ) புதுக்கவிதை – அறிவுமதி ஆ) சிறுகதை – தங்கர்பச்சன்

இ) நாடகம் - அறிவுமதி ஈ) புதினம் – தங்கர்பச்சன்

23. கீழ் வரும் இணைகளில் பொருத்தமானது எது?

அ) களப்பணி - Drafting Work ஆ) களப்பணி - Analysis Work

இ) களப்பணி - Appendix Work ஈ) களப்பணி - Interviewing Peer Groups

24. கீழ் வரும் இணைகளில் பொருத்தமானது எது?

அ) கருவி நூல் - Quotations ஆ) கருவி நூல் – Sample Survey

இ) கருவி நூல் - Thread Line ஈ) கருவி நூல் - Reference Text

25. Historiography - கீழ் வரும் சொற்களில் பொருத்தமானது எது?

அ) இன வரலாறு ஆ) அரசியல் வரலாறு

இ) வரலாறெழுதியல் - ஈ) தன் வரலாறு

26. கீழ் வரும் இணைகளில் தவறானது எது?

அ) களப்பணி - Drafting Work ஆ) முன் ஆய்வு – Review of Literature

இ) வரலாறெழுதியல் - Historiography ஈ) கருவி நூல் - Reference Text

27. கீழ் வரும் சொற்களில் சரியான ஒன்றைக் குறிப்பிடுக.

அ) Descriptive Approach –மதிப்பீட்டு அணுகுமுறை

ஆ) Tone of the author - ஆசிரியர் தொனி

இ) Appendices – பின்னொட்டுக்கள்

ஈ) Obscurity Poem – நையாண்டிப் பாட்டு



www.nitropdf.com

AglaSem Admissions

28. பின் வரும் எந்த இணை தவறு.

அ) பெரியாரியம் - அம்பேத்கரியம் - தலித்தியம்

ஆ) இதிகாசம் - புராணம் - பக்தி இயக்கம்

இ) மறுமலர்ச்சி - தேசியம் - காந்தியம் -

ஈ) மார்க்ஸியம் – கருத்துமுதல் வாதம் - பின் நவீனத்துவம்

29. கீழ் வரும் இணைகளில் சரியான ஓர் இணையை மட்டும் தமிழில் பெயர்த்து எழுதுக.

அ) Simile – Metaphor – Suggestive Meaning - Epic of Ammuvanaar

ஆ) Simile – Metaphor – Suggestive Meaning - Sangam Poems of Kapilar

இ) Simile –Metaphor – Suggestive Meaning - Pakti Poems of Auvvaiyaar

ஈ) Simile – Metaphor – Suggestive Meaning - Modern Poems of Paranar

30. ஞானபீட விருது பெற்றோர் –

அ) அகிலன், ஜெயகாந்தன் ஆ) ஜெயகாந்தன், வைரமுத்து

இ) அகிலன், இந்திரா பார்த்தசாரதி ஈ) ஜெயகாந்தன், வாசந்தி

31. காட்டு வாத்து – எதனுடன் தொடர்புடையது?

அ) புதுக்கவிதை ஆ) சிறுகதை

இ) மரபுக்கவிதை ஈ) வனப்பறவை

32. கீழ் வரும் இணைகளில் சரியானது எது?

அ) அஞ்ஞாடி – நாட்டார் பாடல் தொகுப்பு - பூமணி

ஆ) அஞ்ஞாடி - ஊர்ப்பெயர் - பூமணி

இ) அஞ்ஞாடி - புதினம் - பூமணி

ஈ) அஞ்ஞாடி - சிறுகதைத் தொகுப்பு - பூமணி

33. பின் வரும் இணைகளில் தனித்து நிற்பது எது?

அ) செ.வை.சண்முகம் – க. முருகையன் - இரா.கோதண்டராமன்

ஆ) தமிழவன் – க. முருகையன் - இரா.கோதண்டராமன்

இ) செ.வை.சண்முகம் – இன்குலாப் - இரா.கோதண்டராமன்

ஈ) செ.வை.சண்முகம் – க. முருகையன் - தொ.பரமசிவம்



www.nitropdf.com

34. 'படைப்பு வெளியாகும் போது ஆசிரியர் இறந்துவிடுகிறார்' – என்றவர்

அ) நோம் சாம்ஸ்கி ஆ) ரேமாண்ட் வில்லியம்ஸ்

இ) ரோலன் பார்த் ஈ) சிமோன் தி பௌவார்

35. தி ஓரியண்டலிஸம் – இந்நூலை எழுதியவர்

அ) எட்வர்டு சையித் ஆ) காயத்ரி ஸ்பிவாக்

இ) ரோலன் பார்த் ஈ) சிமோன் தி பௌவார்

36. 'அவர் நன்னெடுங்குன்றம் பாடுக பாட்டே' – ஔவையாரின் இந்தச் சங்கப்பாடலடியில் உள்ள 'அவர்' என்பது

அ) சேய்மைச் சுட்டு ஆ) அண்மைச் சுட்டு

இ) படர்க்கைச் சுட்டு ஈ) நெஞ்சறி சுட்டு

37. 'உணவெனப்படுவது நிலத்தொடு நீரே' – இந்த அடியை எழுதியவர்

அ) ஔவையார் ஆ) குடபுலவியனார்

இ) ஒக்கூர் மாசாத்தியார் ஈ) பாண்டியன் நெடுஞ்செழியன்

38. திருக்குறளில் சங்க இலக்கியத் தாக்கம் மிகுதியாக உள்ள பகுதி

அ) கடவுள் வாழ்த்து ஆ) அறத்துப்பால்

இ) பொருட்பால் ஈ) இன்பத்துப்பால்

39. 'எம் தமிழர் படஞ்செய்தார்' – என்று திரைப்படம் பற்றி விமர்சித்துப் பாடியவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன்

40. இவர்களில் ஒருவர் சங்கப் பாடல்களுக்கு நவீன நாடகம் எழுதியவரும் ஆவார்

அ) வைரமுத்து ஆ) இன்குலாப்

இ) பட்டுக்கோட்டையார் ஈ) ந.முத்துசாமி



www.nitropdf.com

AglaSem Admissions

## பகுதி – ஆ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும் 5 X12 = 60

1. மிகு இலக்கிய வளம்மிக்க தென்திராவிட மொழி எது? அதன் தொன்மையை விவரி.
2. திராவிட மொழிகளில் உள்ள ஏதேனும் ஒரு மரபிலக்கணத்துடன் சமஸ்கிருதம், பாலி மொழிகளில் உள்ள ஏதேனும் ஒரு மரபிலக்கணத்தை ஒப்பிடுக.
3. அற இலக்கியக் கொள்கைகளில் இரண்டைத் திருக்குறள் வழி விவரி.
4. பெரிய புராணம் காப்பியம் ஆகுமா? என்பதனை அறிய உதவும் ஆய்வு நெறிமுறை எது? விவரி.
5. கீழடி அகழாய்வுக்கான அறிக்கை எழுதத் தேவையான ஆய்வுநெறிமுறைகள் எவை? விவரி.
6. தமிழ்ச் சிறுகதைகளில் தலித் வாழ்வியல்: கட்டுரை தருக.
7. தற்காலத் தமிழ் இலக்கியப் போக்குகளின் தனிச்சிறப்புகள் எவை? விளக்குக.
8. நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகள் – பண்பாடு - இலக்கியம் இயைபுபடுத்தி எழுதுக.
9. தமிழ்ப் புதுக்கவிதைகளில் சங்க இலக்கியப் புனைவு மரபின் தாக்கம் பற்றி ஒப்பிலக்கியத் திறனாய்வு அடிப்படையில் கட்டுரை தருக.
10. திரைப்படங்கள் ஆக்கப்பெற்ற தமிழ்ப் புதினங்கள் பற்றி எழுதுக.

* * *



www.nitropdf.com